# இழப்பீடுகளுக்கான அலுவலகம் - இலங்கை

# ஆண்டறிக்கை 2021

(நிதி அறிக்கை தேவை சார்பாக)

இழப்பீடுகளுக்கான அலுவலகம் - இலங்கை
408, காலி வீதி
கொழும்பு 03.

# இழப்பீடுகளுக்கான அலுவலகம்
# ஆண்டறிக்கை – 2021

## 1. அறிமுகம்

இழப்பீடுகளுக்கான அலுவலகம் (OR) மீளாய்வாண்டின் போது அதன் சட்டப்பூர்வ ஆணையை அமுல்ப்படுத்துவதில் கவனம் செலுத்தி அதன் செயற்பாடுகளைத் தொடர்ந்தது. அலுவலகம் அதனது இரண்டாவது ஆண்டை மார்ச்சில் நிறைவு செய்து மூன்றாவது ஆண்டைத் தொடங்கியுள்ளதால் அலுவலகம் சேவை செய்ய உறுதிபூண்டுள்ள இன்னலுற்ற சமூகத்தின் தேவைகளைப் பற்றிய சிறந்த புரிந்துகொள்ளலுடன் அலுவலகத்தால் அதன் பல செயற்பாடுகளை வடிவமைக்க முடிந்திருந்தது.

2018 இன் 34 ஆம் இலக்க இழப்பீடுகளுக்கான அலுவலக சட்டத்தின் 2 ஆம் பிரிவு OR இன் பின்வரும் நோக்கங்களை குறிப்பிடுகின்றது –

(1) இன்னலுற்ற ஆட்களுக்கு தனியான மற்றும் கூட்டான இழப்புக்கான எதிரீடுகளை அளிப்பதற்கென இழப்புக்கான எதிரீடுகள் மீதான கொள்கைகளை வகுத்தமைத்தலும் அவற்றை அமைச்சரவைக்கு விதந்துரைத்தலும்.

(2) பொதுக்கல்வி, நினைவேந்துகின்றமை பற்றியதும் மற்றும் சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் பாலியல் வன்முறைகளுக்குப் பலியாக்கப்பட்டோர் அத்துடன் அங்கவீனமுற்ற ஆட்கள் பற்றியதுமான விசேடித்த கொள்கைகள் உட்பட, அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டவாறாக, இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அத்தகைய கொள்கைகளை இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் வசதிப்படுத்தலும் நடைமுறைப்படுத்தலும்.

(3) நல்லிணக்கத்தை இலக்காகக் கொண்ட வேறு பொறிமுறைகளுடன், இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் ஒத்தியல்பை உறுதிப்படுத்துவதற்கான இணைப்புக்களை தாபித்தல். மற்றும்

(4) தகவுடைய இன்னலுற்ற ஆட்களுக்கு இழப்புக்கான எதிரீடுகளின் ஒப்படைப்புப் பற்றிய முன்னேற்றத்தை கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும்.

## 2. இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் உறுப்பினர்கள்

மீளாய்வாண்டின் போது செயற்பட்ட OR இன் உறுப்பினர்கள் பின்வருமாறு உள்ளனர்:

1. திருமதி தாரா விஜயதிலக - தலைவர்
2. டாக்டர் ஜே.எம். சுவாமிநாதன் - உறுப்பினர்
3. திரு ஏ. ஏ. எம். பாத்திஹு - உறுப்பினர்
4. செல்வி செல்லத்தம்பி சுமித்ரா - உறுப்பினர்
5. மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) பாலித பெர்னாண்டோ - உறுப்பினர் (2021 மே 24 இல் நியமிக்கப்பட்டுள்ளார்)

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் செயலகம் பணிப்பாளர் நாயகம் தலைமையிலான துணைப் பதவியணியினரை உள்ளடக்குகின்றது, செயலகம் 2019 ஏப்ரலில் தொடங்கப்பட்டதில் இருந்து பகுதி நேர பதில் பணிப்பாளர் நாயகம் ஒருவரை மாத்திரமே கொண்டிருந்ததுடன் இதன் விளைவாக அதன் பணி வெளியீட்டில் கடுமையான இடையூறு ஏற்பட்டது, ஆனால் 2021 ஆகஸ்ட் 2 முதல் அமுலுக்கு வரும் வகையில் பொதுச் சேவையில் இருந்து இரண்டாம் நிலை முழுநேர பணிப்பாளர் நாயகம் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்ய முடிந்தது.

## 3. மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

OR ஆல் உருவாக்கப்பட்ட இழப்பீடுகளை வழங்குவதற்கான இழப்பீட்டுக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் 2021 ஆகஸ்ட் 17 இல் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது. இது கொள்கை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கான நியதிச்சட்ட செயன்முறையை பூர்த்தி செய்து, இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் வேலைத் திட்டத்திற்கான அடிப்படையை வழங்குகின்றது. சட்டத்தில்

கோரப்பட்டுள்ள இழப்பீட்டுக் கொள்கை மற்றும் வழிகாட்டல்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நீதி அமைச்சு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள், இன்னலுற்ற நபர்களுக்கு இழப்பீடுகளை வழங்குவதில், தலையீட்டின் 8 முக்கிய கருப்பொருள் பகுதிகள் மற்றும் கடைபிடிக்க வேண்டிய 10 வழிகாட்டல் கோட்பாடுகளை அடையாளம் காட்டுகின்றது.

**தலையீடுகளுக்கான முக்கிய கொள்கை கருப்பொருள் பகுதிகள்**

i. வாழ்வாதார உதவி
ii. இழப்பீடு மற்றும் நிதி உதவி
iii. காணி உரிமைகளை மீளமைத்தல்
iv. வீடமைப்பு வசதி வழங்குதல்
v. சமூக உட்கட்டமைப்பின் அபிவிருத்தி
vi. நிர்வாக ரீதியான நிவாரணம்
vii. உளவியல் சமூக ஆதரவு
viii. ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் வன்முறை மீண்டும் நிகழாமல் இருத்தல் என்பவற்றிற்கான நடவடிக்கைகள்

OR ஆல்

**இழப்பீடுகளைத் தீர்மானிப்பதில் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படும் 10 வழிகாட்டல்கள்**

1. பாதிக்கப்பட்டவர்களின் மையம் - அனைத்து தீர்மானங்களும் இன்னலுற்ற நபர்களுக்கு எது சிறந்தது என்பதை அடிப்படையாகக் கொண்டது.
2. இன்னலுற்ற நபர்கள் இழப்பீடுகளை பெற்றுக்கொள்வதற்கான தகுதிக்கான அளவுகோல்கள்,
3. தகுதியுள்ள இன்னலுற்ற நபர்களுக்கு வழங்கப்படும் படிவம் மற்றும் பொருத்தமான இடங்களில் இழப்பீடுகளின் அளவு
4. நிதி இழப்பீட்டிற்காக இன்னலுற்ற நபர்களின் தகுதிக்கான அளவுகோல்கள்
5. இன்னலுற்ற நபர்களின் அவசர இழப்பீடுகளுக்கான தகுதிக்கான அளவுகோல்கள்
6. இன்னலுற்ற நபர்களுக்கு பல்வேறு வகையான இழப்பீடுகளை ஏற்பாடு செய்தல் அல்லது வழங்குவதில் உதவக்கூடிய நிறுவனங்கள்.
7. இழப்பீடுகளுக்காக சரிபார்க்கப்பட்ட விண்ணப்பங்கள் எந்த அளவுகோலின் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்படும்
8. நம்பகத்தன்மையை சரிபார்ப்பதற்கான அளவுகோல்கள்
9. இறந்தவர்களை நினைவுகூருவதற்கான அளவுகோல்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள்
10. இன்னலுற்ற நபர்களின் குறிப்பிட்ட குழுக்களின் விசேட தேவைகளை நிவர்த்தி செய்தல்

மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### 3.1 வாழ்வாதார ஆதரவு

பாதிக்கப்பட்ட சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக, OR புதிய ஆரம்பிப்புக்கள் மற்றும் தொழில்முனைவோரை செயற்படுத்தும் அறிவு மற்றும் தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டமொன்றை உருவாக்கியுள்ளது. உள்நாட்டில் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி புதிய வணிகங்களை தொடங்குவதற்கான அறிவை இன்னலுற்ற நபர்களுக்கு வழங்குவதற்காக இந் நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது பாதிக்கப்பட்ட சமூகம் பாரம்பரிய தொழில்களை விட சந்தையில் அதிக போட்டித்தன்மை கொண்ட புதிய ஆரம்பிப்பு வாய்ப்புகளை ஆராய்வதற்கு உதவும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் பெண் குடும்பத் தலைவர்களுக்கான முதலாவது அறிவு மற்றும் தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டம் திசெம்பர் மாதம் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் நூற்றியிரண்டு (102) பெண்கள் பங்குபற்றியிருந்தனர், இதில்

கன்னி தேங்காய் எண்ணெய் பிரித்தெடுத்தல், திரவ சோப்பு தயாரித்தல் போன்ற புதிய ஆரம்பிப்புக்கள் பற்றிய விரிவுரைகள் மற்றும் செயன்முறை விளக்கங்கள் ஆகிய இரண்டும் வழங்கப்பட்டிருந்தது. புதிய முயற்சிகளை ஆதரிக்க ஆர்வமுள்ள பயனாளிகளுடன் பின்தொடர் நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

### 3.2 இழப்பீடு மற்றும் நிதி ஆதரவு:

மீளாய்வு காலப்பகுதியின் போது OR 5,964 உரிமைகோரிக்கைகளை செயற்படுத்தி வடக்கு மற்றும் கிழக்கு மோதல்கள் மற்றும் 2006 மற்றும் 2019 இற்கு இடையில் ஏற்பட்ட ஏனைய ஏழு சிவில் கலவரங்கள் என்பவற்றின் விளைவாக ஏற்பட்ட இறப்பு, காயம் மற்றும் நட்டம் அல்லது சொத்து சேதம் என்பவற்றிற்கான இழப்பீடாக ரூபா 399.8 மில்லியன் தொகையை செலுத்தியிருந்தது.

**<u>2021 இல் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் - முக்கிய அம்சங்கள்</u>**

| | விடயம் | அளவு |
|---|---|---|
| 1 | ”மீண்டெழும் செலவினங்களுக்கான” மொத்த பாதீட்டு ஒதுக்கீடு | ரூபா 900 மில்லியன் |
| 2 | இழப்பீட்டு கொடுப்பனவுக்காக ”மீண்டெழும் செலவின” பாதீட்டில் இருந்து உள்ளக ரீதியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை | ரூபா 800 மில்லியன் |
| 3 | மொத்த மீண்டெழும் பாதீட்டின் சதவீதமாக உள்ளக ஒதுக்கீடு (அதாவது 800 மில்லியன்) | 88.9% |
| 4 | 2021 ஜனவரி 1 இல் உள்ளவாறு இழப்பீடுகளுக்கான அலுவலகத்தில் செயன்முறைப்படுத்தப்பட வேண்டிய நிலுவையாக உள்ள உரிமைக்கோரல் விண்ணப்பங்கள் | 12,262 |
| 5 | ஆண்டின் போது பெறப்பட்ட புதிய விண்ணப்பங்கள் | 5,827 |
| 6 | 2021 சனவரி 1 இல் உள்ளவாறு கொடுப்பனவிற்காக அங்கீகரிக்கப்பட்டு தீர்ப்பனவு செய்வதற்காக காத்திருக்கிற உரிமைகோரல் விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 2,950 |
| 7 | ஆண்டின் போது கொடுப்பனவிற்காக செயன்முறைப்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட உரிமைகோரல் விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 3,208 |
| 8 | தீர்ப்பனவு செய்யப்பட்ட உரிமைகோரல்களின் மொத்த எண்ணிக்கை | 5,964 |
| 9 | 5964 உரிமைக்கோரல் விண்ணப்பதாரர்களுக்கு செலுத்தப்பட்ட மொத்தத் தொகை | ரூபா 399.8 மில்லியன் |
| 10 | ஆண்டிறுதியில் கொடுப்பனவிற்காக அங்கீகரிக்கப்பட்டு தீர்ப்பனவு செய்வதற்காக காத்திருக்கிற உரிமைகோரல்களின் எண்ணிக்கை | 194 |
| 11 | கொடுப்பனவிற்காக அங்கீகரிக்கப்பட்ட உரிமைகோரல்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு ஆண்டிறுதியில் உள்ளவாறு தேவைப்பட்ட தொகை | ரூபா 7.9 மில்லியன் |

2021 ஆம் ஆண்டில் இழப்பீட்டு கொடுப்பனவிற்காக ரூபா 800 மில்லியன் ஒதுக்கப்பட்ட போதிலும் கொவிட்19 தொற்றுநோயின் விளைவாக அடிக்கடி பூட்டுதல்கள் மற்றும் பயணக் கட்டுப்பாடுகள் தேவைப்பட்டன. இதன் விளைவாக உரிமைகோரல்களை செயன்முறைப்படுத்துதல் கடுமையாக தடைபட்டது.

இழப்பீட்டு கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக, REPPIA ஆல் தொடங்கப்பட்ட கடன் திட்டத்தையும் OR தொடர்ந்து செயற்படுத்தியது. பொது திறைசேரியால் வங்கிக்கு விடுவிக்கப்படும் பணத்திலிருந்து இலங்கை வங்கியின் ஊடாக கடன்கள் வழங்கப்படுகின்றன. OR இன் உத்தியோகத்தர்கள், பயனாளிகளைத் தெரிவுசெய்வதற்கு விண்ணப்பதாரர்களை மதிப்பீடு செய்து பரிந்துரைப்பதற்கு வங்கி அதிகாரிகளுடன் பணியில் ஈடுபட்டுள்ளனர். இத் திட்டத்தின் கீழ், இன்னலுற்ற நபர்களுக்கு சுயதொழில் மற்றும் வீடமைப்பிற்காக நிதியுதவி வழங்கப்படுகிறது. மேலும், சமூகரீதியில் மீண்டும்

ஒருங்கிணைக்கப்பட்ட முன்னாள் போராளிகளிற்கும் சுயதொழிலுக்கு ஆதரவு வழங்கப்படுகின்றது. வருடாந்தம் 2% வட்டி விகிதத்தில் அதிகபட்சமாக ரூபா 250,000 தொகை கடன்களாக வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழான முன்னேற்றத்தின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| திட்டம் | 2021 ஆம் ஆண்டின் போது கடன்களை பெற்றுக்கொள்வதற்கு OR ஆல் பரிந்துரைக்கப்பட்ட எண்ணிக்கை | 2021 ஆம் ஆண்டின் போது BoC இடமிருந்து கடன்களை பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை | கடன்களாக வழங்கப்பட்ட தொகைகள் (ரூபா) |
|---|---|---|---|
| இன்னலுற்ற நபர்களுக்கான சுயதொழில் உதவி | 49 | 206* | 42,350,000 |
| இன்னலுற்ற நபர்களுக்கான வீடமைப்பு வசதி | 77 | 65 | 16,200,000 |
| சமூக ரீதியாக ஒருங்கிணைக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கான சுயதொழில் ஆதரவு | 33 | 18 | 7,550,000 |
| **மொத்தம்** | **159** | **289** | **6,610,000** |

* இது 2020 ஆம் ஆண்டின் போது பரிந்துரைக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கையை உள்ளடக்குகின்றது.

விண்ணப்பதாரிகள் பிணையை வழங்க முடியாத காரணத்தால், OR ஆல் பரிந்துரைக்கப்பட்ட கடன்கள் அவ் அனைவரிற்கும் வங்கியால் வழங்கப்பட முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. சுயதொழில் செயற்திட்டங்களைத் தொடங்குவதற்கு அல்லது தொடர்வதற்கு நிதி உதவி தேவைப்படுபவர்களுக்கு சிறந்த பலன்களை அடைந்துகொள்வதற்காக திட்டத்தை மீள்வடிவமைத்தல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

### 3.3 காணி உரிமைகளை மீட்டெடுத்தல்; வீடமைப்பு வசதியை வழங்குதல்; சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தி; நிர்வாக ரீதியான நிவாரணம்

ஏற்கனவே மாவட்ட மட்டத்தில் பல நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளதால், இடைவெளிகளைக் இனங்காண்பதற்கு மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து செயற்படுவது அவசியம் என OR கருதுகிறது. இந் நோக்கத்திற்காக, OR இன் வகிபங்கு மற்றும் ஆணை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் ஆதரவைப் பற்றி கலந்துரையாடுவதற்கும் 2021 நவம்பரில் 25 மாவட்டங்கள் அனைத்திலும் உள்ள மாவட்டச் செயலாளர்களை OR சந்தித்தது. பாதிக்கப்பட்ட சமூகத்தின் தேவைகளை இனங்காண்பதற்கு மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் இருந்து தொடர்புடைய தகவல்களை சேகரிப்பதற்கு OR கேள்வித்தாளொன்றை விநியோகித்தது. இந்தத் தேவைகளை அந்தந்த நிகழ்ச்சித்த்திட்டங்களில் இணைப்பதற்கான சாத்தியக்கூறுகளை கண்டறியும் பொருட்டு அதற்குப் பின்னர் சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்படும்.

### 3.4 உளவியல் சமூக ஆதரவு

பாதிக்கப்பட்டவர்கள் மீதான மோதலின் தாக்கம் கவனிக்கப்பட வேண்டிய ஒரு தீவிர கவலையாக இனங்காணப்பட்டது. ஆரம்ப உளவியல் சமூக ஆதரவு நிகழ்ச்சித்திட்டமொன்று வடிவமைக்கப்பட்டதுடன் 26 நிகழ்ச்சி முகாமையாளர்களின் பயிற்சி மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டது. பயிற்சியானது சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தத்துவங்கள் மற்றும் நியமங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. கொவிட்19 கட்டுப்பாடுகள் காரணமாக பெரும்பாலான பயிற்சிகள் நடாத்தப்பட வேண்டியிருந்தன. ஆரம்ப நிகழ்ச்சித்திட்டத்திற்காக தெரிவுசெய்யப்பட்ட ஐந்து பிரதேச செயலகப் பகுதிகளில் அதாவது. கிளிநொச்சி, மட்டக்களப்பு, அம்பாறை, குருநாகல் மற்றும் மாத்தறை மாவட்டங்களுக்குள் இன்னலுற்ற 136 நபர்களுடன் கள மட்ட சந்திப்புக்களை மேற்கொண்டு ஆண்டின்

போது இவ் ஆரம்ப நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன் களப் பணி 2022 மார்ச் அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்ததுடன் நிகழ்ச்சி முகாமையாளர்கள் 2022 யூன் வரையான சுமார் ஆறு மாதங்களுக்கு செயன்முறையில் ஈடுபடுவார்கள்.

### 3.5 ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் வன்முறைகள் மீண்டும் நிகழாமல் இருத்தல் என்பவற்றிற்கான நடவடிக்கைகள்

பல முன்முயற்சிகள் இனங்காணப்பட்டு கலந்துரையாடப்பட்டு வருகின்றதுடன் அரசாங்கம் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் உட்பட தொடர்புடைய பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும். ஆரம்ப தர மாணவர்களிடையே அமைதி மற்றும் ஒற்றுமையை மேம்படுத்தும் வகையில் சித்திரப் புத்தகம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கான ஆரம்ப கலந்துரையாடல் கல்வி அமைச்சுடன் நடைபெற்றது.

காணாமல் ஆக்கப்பட்டோரிற்கான அலுவலகம் (OMP), தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் (ONUR) மற்றும் OR ஆகியவற்றின் நோக்கங்களின் பொதுவான தன்மையைக் கருத்தில் கொண்டு, ஆதரவுக்கான பொதுவான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பகுதிகளைப் பற்றி கலந்துரையாடுவதற்கும், அதன் மூலம் நகலாக்கம் செய்யப்படுவதை தவிர்ப்பதற்கும் மற்றும் வளங்களின் அர்த்தமுள்ள பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கும் ஒழுங்காக கூட்டங்களை நடாத்துகின்ற ”Unity Cluster” என்ற கூட்டு ஆலோசனை குழுவை OR இன் உறுப்பினர்கள் தொடங்கியுள்ளனர்.

### 3.6 ஏனைய முக்கிய முன்முயற்சிகள்

- **பங்குதாரர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்**

அமைச்சரவை அங்கீகரித்த கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்கள் மற்றும் இழப்பீடுகளை வழங்குதல் தொடர்பாக OR இன் வகிபங்கு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் OR வெவ்வேறு பங்குதாரர் குழுக்களுக்கு விளக்கங்களை அளித்தது. வழங்கப்பட்ட விளக்கங்களின் சுருக்கம் பின்வருமாறு உள்ளது-

  - அபிவிருத்திப் பங்காளர்கள் - 2021 ஒக்தோபர் 8
  - வண்ணாத்துப்பூச்சி அமைதி பூங்கா CSO - ஒக்தோபர் 27
  - வட மாகாண கௌரவ ஆளுநர் மற்றும் மாவட்டச் செயலாளர்களுடனான சந்திப்பு - 2021 ஒக்தோபர் 29
  - சிவில் சங்க கூட்டமைப்புக்கள் - 2021 நவம்பர் 9
  - முஸ்லீம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு (புத்தளம் மாவட்டத்தின் இடம்பெயர்ந்த சமூகம்) - நவம்பர் 25
  - மட்டக்களப்பு மாவட்ட ஊனமுற்றோர் செயற்பாட்டுக் குழு - 2021 திசெம்பர் 21

- **சிவில் சமூக அமைப்புகளுடனான ஈடுபாடு:**

கொள்கை மற்றும் வழிகாட்டல்களை வரைவதற்கு முன்னர், கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கு OR முன்பு சிவில் சமூக அமைப்புடன் ஈடுபட்டிருந்தது. கள மட்டத்தில் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதில் இந்த அமைப்புகளின் (CSO's) ஆதரவைப் பெறுவதும் பாதுகாப்பதும் முக்கியமானதாக OR கருதுகிறதுடன் குறிப்பாக ஒத்துழைப்பு மூலம் வளப் பயன்பாட்டை அதிகப்படுத்துகிறது. இதனைத் தொடர்ந்து, OR ஆனது 2021 ஒக்தோபர் 15 இல் CSOs உடன் உரையாடலொன்றை ஏற்பாடு செய்தது, இதில் 30 அமைப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 40 இற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். இக்கலந்துரையாடலின் தொடர்ச்சியாக, பாதிக்கப்பட்ட சமூகங்களின் நலனுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவது குறித்து கலந்துரையாடுவதற்கு பல CSOs உடன் செயலகம் இருதரப்பு கலந்துரையாடல்களை நடாத்தியிருந்தது.

- **புதிய இழப்பீட்டு முறை பற்றிய கேள்வி பதில் வெளியீடு**

இன்னலுற்ற நபர்களுடன் நெருக்கமாகப் பழகுபவர்கள் மற்றும் இலங்கையின் இழப்பீட்டு முறை பற்றி தெரிந்து கொள்ள விரும்புபவர்களுக்கு தகவல்களை வழங்கும் நோக்கில், OR 2021 மார்ச்சில் கேள்விகள் மற்றும் பதில்கள் (Q&A) கையேட்டை அச்சிட்டு விநியோகித்தது. அமைச்சரவை இழப்பீட்டுக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கான அங்கீகாரத்தை வழங்கியதை தொடர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைக் கண்ணோட்டங்களில் சிலவற்றை உள்ளடக்குவதற்காக கையேட்டைத் திருத்துவது முக்கியமானதாகக் கருதப்பட்டது. அதற்கிணங்க Q&A இன் திருத்தப்பட்ட பதிப்பு திசெம்பரில் அச்சிடப்பட்டது.

- **தகவல்களின் வெளிப்படைத்தன்மை மற்றும் பரவச் செய்யும் தன்மை**

பொருத்தமான மற்றும் சரியான தகவலை வழங்குவதற்காக, OR இணையத்தளம் புதுப்பிக்கப்பட்டு, இன்னலுற்ற நபர்கள் தொடர்பான விபரங்கள் தொடர்பாக இரகசியத்தன்மையைப் பேணுவதற்கு உட்பட்டு, மூன்று மொழிகளிலும் அனைத்து தகவல்களும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

மேலும், இன்னலுற்ற நபர்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பாக சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானமெடுக்கும் வகையில் விரிவான தகவல் முகாமைத்துவ முறைமையொன்று உருவாக்கப்பட்டு வருகிறது.

- **OR பதவியணியினரை உணர்ச்சியூட்டல்:**

மோதலில் பாதிக்கப்பட்டவர்களைக் கையாள்வதில் பின்பற்றப்பட வேண்டிய பாதிக்கப்பட்டவர் மைய அணுகுமுறை தொடர்பாக அதன் பதவியணியினரிற்கு விழிப்புணர்வு மற்றும் அதிகாரம் அளிப்பது இன்றியமையாததாக OR கருதுகிறது. அதன்படி, மீளாய்வு காலப்பகுதியில் பதவியணியினரிற்கு பின்வரும் அமர்வுகள் நடாத்தப்பட்டன-

- சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தால் (CEJ) நடாத்தப்பட்ட பாலினம் மற்றும் இழப்பீடுகள் பற்றிய அமர்வு.
- தேவையுள்ள பெண்களால் நடாத்தப்பட்ட உள்நாட்டு வன்முறை பற்றிய விழிப்புணர்வு அமர்வு (WIN)
- 2021 ஆம் ஆண்டு உலக மனநல தினத்தைக் குறிக்கும் அமர்வொன்று பாதிக்கப்பட்டவர்களின் மனநிலை மற்றும் நிவாரணம் வழங்குவதில் OR பதவியணியினரின் வகிபங்கைப் புரிந்துகொள்வதற்காக உளவியல் சமூக உதவி ஆலோசகனையாளரால் நடாத்தப்பட்டது.
- OR இன் பயிற்சி பெற்ற நிகழ்ச்சி முகாமையாளர்களால் அவர்களின் உண்மையான அனுபவத்தின் அடிப்படையில் நடாத்தப்பட்ட மன அழுத்தம் மற்றும் சமாளித்தல் தொடர்பான அமர்வு
- சேவை வழங்கலில் பொதுவான மற்றும் விளைவு சார்ந்த அணுகுமுறையை கடைப்பிடிப்பதில் முக்கிய கவனம் செலுத்தி பணிப்பாளர் நாயகத்தால் நடாத்தப்பட்ட இழப்பீட்டுக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்கள் பற்றிய விழிப்புணர்வு அமர்வு.
- புனர்வாழ்வு பணியகத்தின் ஆணையாளர் நாயகம் - 2022.01.24 நடாத்திய இன்னலுற்ற நபர்களின் தேவைகளைப் புரிந்துகொள்வதற்கான விழிப்புணர்வு அமர்வு.

## 4. செயலகம்

செயலகத்தின் பதவியணி நிலை பின்வருமாறுள்ளது:

| **பதவியணி நிலை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **வெற்றிடங்கள்** |
|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் | 01 | - |
| பணிப்பாளர் | 01 | 01 |
| பிரதி பணிப்பாளர்/ உதவி பணிப்பாளர் | 04 | 01 |
| நிர்வாக உத்தியோகத்தர் | 01 | - |
| உள்ளக கணக்காய்வாளர் | 01 | - |
| இழப்பீட்டு உத்தியோகத்தர் | 22 | 09 |
| மொழிபெயர்ப்பாளர் | 01 | - |
| உள்ளக கணக்காய்வு உதவியாளர் | 01 | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் | 30 | 09 |
| சாரதி | 07 | 02 |
| அலுவலக உதவியாளர் | 07 | - |
| காவலாளி | 01 | - |
| **மொத்தம்** | **55** | **23** |

மேற்குறிப்பிட்டவற்றிற்கு மேலதிகமாக மூன்று (03) முழு நேர ஆலோசனையாளர்களின் சேவைகள் OR இற்கு இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (IOM) மூலம் பின்வரும் பணிப் பகுதிகளுக்குக் கிடைக்கப்பெற்றது-

1. ஆலோசனையாளர்/ஆராய்ச்சி மற்றும் நிகழ்ச்சித்திட்டம்
2. உளவியல் சமூக நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஆலோசனையாளர்
3. ஆலோசனையாளர்/ நிகழ்ச்சித்திட்டங்கள்

இழப்பீடுகளை வழங்குதல் தொடர்பான பணியை நிறைவேற்றுவதில் குறிப்பிடத்தக்க சவாலாக உள்ள இழப்பீட்டு உரிமைக் கோரல்களை செயன்முறைப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள பதவியணியினரின் பதவியணி நிலைகளிலுள்ள வெற்றிடங்கள் (இழப்பீட்டு உத்தியோகத்தர்களின் 41% வெற்றிடங்களும், முகாமைத்துவ உதவியாளர்களின் 30% வெற்றிடங்களும்) விரைவில் நிவர்த்தி செய்யப்படலாம் என்று நம்பப்படுகிறது.

## 5. நிதி செயன்முன்னேற்றத்தின் பொழிப்பு

OR ஆனது 2021 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஒதுக்கீடாக ரூபா 910 மில்லியன் தொகையை பெற்றிருந்தது. இருப்பினும், கொவிட் 19 தொற்றுநோய் மற்றும் அரசாங்கத்தால் அடிக்கடி விதிக்கப்பட்ட பூட்டுதல்கள் காரணமாக, எதிர்பார்த்த செலவினங்களை எதிர்கொள்ள முடியவில்லை. இதன் விளைவாக, அமைச்சால் கோரப்பட்டவாறு மீண்டெழும் வரவுசெலவுத் திட்டத்தில் இருந்து ரூபா 400 மில்லியன் தொகையும் மூலதன வரவுசெலவுத் திட்டத்தில் இருந்து ரூபா 3 மில்லியன் தொகையும் சேமிப்புக்களாக இனங்காணப்பட்டிருந்தன.

மீளாய்வாண்டுக்கான நிதி செயன்முன்னேற்றத்தின் பொழிப்பு கீழே உள்ளது

| விடயம் | ஒதுக்கீடு (ரூபா. மில்லியன்) | பெறப்பட்ட கட்டுநிதி (ரூபா. மில்லியன்) | செலவினம் (ரூபா. மில்லியன் | பெறப்பட்ட கட்டுநிதியின் % ஆக செலவினம் | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| **மீண்டெழுபவை** | | | | | |
| சம்பளங்களும் ஆளணி வேதனங்களும் | 42.00 | 40.50 | 40.50 | 100% | உருவாக்கப்பட்ட பெறுவனவுகளில் இருந்து ரூபா 4.12 மில்லியன் செலவினத்தின் மேலதிக தொகை ஈடுசெய்யப்பட்டது. |
| | | | | | |
| ஏனைய மீண்டெழுபவை | 58.00 | 29.00 | 29.00 | 100% | உருவாக்கப்பட்ட பெறுவனவுகளில் இருந்து ரூபா 14.04 மில்லியன் செலவினத்தின் மேலதிக தொகை ஈடுசெய்யப்பட்டது. |
| இழப்பீட்டுக் கொடுப்பனவு | 800.00 | 399.83 | 399.83 | 100% | |
| **உப மொத்தம்** | **900.00** | **469.83** | **469.33** | **100%** | |
| | | | | | |
| **மூலதனம்** | | | | | |
| மூலதனம் | 10.00 | 7.00 | 2.41 | 0.17% | பெறுகைகளிற்கான பதிலைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டதால் குறைந்த பயன்பாடு காணப்பட்டது. |
| **கூட்டுமொத்தம்** | **910.00** | **476.83** | **471.44** | **99%** | |

**6. நன்றி நவில்தல்**

இழப்பீடுகளுக்கான அலுவலகம் அமுல்ப்படுத்தப்பட வேண்டிய அதன் முக்கிய நிகழ்ச்சித்திட்டங்களில் பலவற்றை செயற்படுத்துவதற்கு இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (IOM) வழங்கிய உதவிக்கு மிகுந்த பாராட்டுதல்களை பதிவு செய்ய விரும்புகிறது. IOM இன் உதவியானது அதன் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்துள்ளது.

**நஸீமா அஹமட்**
பணிப்பாளர் நாயகம்
இழப்பீடுகளுக்கான அலுவலகம்
இலங்கை

**இழப்பீடுகளுக்கான அலுவலகம்**
**இல. 408, காலி வீதி,**
**கொழும்பு – 03.**